வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-ரோஷ்ணா காசிம்

தேதி 25.8.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

கிருஷ்ண பகவான் அவதரித்த ஜென்மாஷ்டமி விழாவை முன்னிட்டு அனைத்து மக்களுக்கும் குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்

நாட்டை வளர்ச்சி பாதையில் வழி நடத்தி செல்ல அரசியல் பின்னனி இல்லாத இளைஞர்கள் அதிக அளவில் பொது வாழ்க்கைக்கு வர வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மகராஷ்டிர மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று லட்சாதிபதி சகோதரிகள் மாநாட்டில் பங்கேற்று, 11 லட்சம் பெண் லட்சாதிபதி சகோதரிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

புதுச்சேரியில், கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த ட்ரோன்கள் மூலம் மருந்து தெளிக்கும் திட்டத்தை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடங்கி வைத்தார்.

*வாழ்த்து* (6)

கிருஷ்ண பகவான் அவதரித்த ஜென்மாஷ்டமி விழாவை முன்னிட்டு அனைத்து மக்களுக்கும் குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். ஜென்மாஷ்டமி என்பது தெய்வீக அன்பு, ஞானம் மற்றும் நீதியை உள்ளடக்கிய பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் பிறப்பை குறிக்கும் என்றும், இந்நாள் ஆழ்ந்த ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த நாள் என்றும் அவர் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

*மன் கீ பாத்* 1 (18)

நாட்டை வளர்ச்சி பாதையில் வழிநடத்தி செல்ல அரசியல் பின்னனி இல்லாத இளைஞர்கள் அதிக அளவில் பொது வாழ்விற்கு வர வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் இன்று நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொண்டு கலந்துரையாடும் மனதின் குரல் நிகழ்ச்சியின் 113 ஆவது அத்தியாயத்தில் அகில இந்திய வானொலியில் உரையாற்றினார். 21 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த பல விஷயங்கள் வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற அடித்தளத்திற்கு வலிமை சேர்த்து வருவதாக அவர் தெரிவித்தார். ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று தேசிய விண்வெளி தினம் கொண்டாடப்பட்டதையும், கடந்த ஆண்டு இதே நாளில்

நிலவின் தென் துருவத்தில் சிவசக்தி புள்ளியில் சந்திரயாண் -3 விண்கலம் வெற்றிகரமாக தரை இறங்கியதையும் அவர் நினைவு கூர்ந்தார். இந்த பெருமை மிகு சாதனையை படைத்த முதல் நாடு என்று இந்தியா பெயர் பெற்றதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார். விண்வெளி துறையில் ஏற்பட்டுள்ள சீர்திருத்தங்களால் இளைஞர்களுக்கு கணிசமான ஆதாயம் கிடைத்திருப்பதை கருத்தில் கொண்டு ஸ்பேஸ் டெக் ஸ்டார்ட் அப்-பான, கேலக்சி-ஐ யின் குழுவினரான சென்னை ஐஐடி யின் முன்னாள் மாணவர்களுடனும் அவர் கலந்துரையாடினார். இதில் அந்த குழுவை சேர்ந்த சூயஷ் டேனில், ரஷீத், கிஷன், பிரணீத் ஆகியோர் பங்கேற்று



தங்கள் செயல்பாடு குறித்து எடுத்துரைத்தனர். தொடர்ந்து பேசிய பிரதமர், அரசியல் பின்பலம் இல்லாத 1 லட்சம் இளைஞர்களை அரசியல் அமைப்போடு இணைப்பது குறித்து இந்த ஆண்டு செங்கோட்டையில் அழைப்பு விடுத்ததாகவும், இந்த அரசியல் பிரவேசத்திற்கு அதிக எண்ணிக்கையிலான இளைஞர்கள் விருப்பம் தெரிவித்து, கடிதம் மற்றும் சமூக ஊடக பதிவேடுகளை தமக்கு அனுப்பி இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். அவ்வாறு அரசியல் பின்னனி இல்லாத இளைஞர்கள் அரசியலுக்குள் பிரவேசிப்பது அவர்களுக்கு உற்சாக அனுபவங்களை

அளிப்பது மட்டும் அல்லாமல் தேசத்திற்கு நலன் பயக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார். சுதந்திர போராட்டத்தில் சமூகத்தின் அனைத்து துறைகளில் இருந்தும் அரசியல் பின்பலம் இல்லாத பலர் பங்கேற்றதை அவர் சுட்டிக் காட்டினார். வளர்ந்த இந்தியா என்ற இலக்கை அடைய மீண்டும் ஒரு முறை அதே உணர்வு தேவைப்படுவதால் இந்த இயக்கத்தில் பங்கேடுக்குமாறு இளைஞர்களை அவர் கேட்டுக் கொண்டார். இல்லந்தோறும் மூவர்ண கொடி ஏற்றும் இயக்கம் மூலம் நீர் நிலம் ஆகாயம் ஆகிய இடங்களில் தேசிய கொடி பறந்ததாகவும், இது தொடர்பான தங்களது புகைப்படங்களை 5 கோடிக்கும் மேற்பட்டோர் இணையதளத்தில் பதிவு செய்ததையும் அவர் சுட்டிக்காட்டினார். தேசம்



முழுவதும் ஓரிழையால் இந்த இளைஞர்கள் இணைந்திருப்பதாகவும், இதுதான் ஒரே பாரதம்-உன்னத பாரதம் என்றும் பிரதமர் பெருமிதம் தெரிவித்தார். விலங்குகளுடன் அன்பு பாராட்டும் விதமாக அசாம் மாநிலத்தில் உள்ள ஒரு குக் கிராமத்தில் கிப்பன் குரங்குகளுடன் மக்கள் நல்லுறவு கொண்டிருப்பதை அவர் சுட்டிக் காட்டினார். நமது தேசத்தில் பல ஸ்டார்ட்-அப் குழுக்கள் சுற்றுச்சூழலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பல்வேறு முயற்சி எடுத்து வருவதாக தெரிவித்த பிரதமர், இ-கான்ஷியஸ்

என்ற குழு நெகிழி பொருட்களை கொண்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை தயாரித்து வருவதையும் எடுத்துரைத்தார். இத்தகைய முயற்சிகளில் அனைவரும் இணைந்தால் சுற்றுச்சூழலை பாதுகாப்பதுடன், தேசத்தையும் நாம் முன்னேற்ற முடியும் என்றும் பிரதமர் தெரிவித்தார். ஆகஸ்ட் 19 ஆம் தேதி ரக்ஷாபந்தன் தினமும், அதே நாளில் சமத்துவ தினமும் கொண்டாடப்பட்டதை நினைவு கூர்ந்த பிரதமர், ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான லிதுவேனியாவில் சமஸ்கிருதம் ஆன் த ரிவர்ஸ் என்ற தலைப்பில் சுற்றுச்சூழல் துறையின் பேராசிரியர் திரு வைடிஸ் விடூனஸ் தலைமையில் கூடிய குழுவினர் வேதங்கள் மற்றும் கீதையை ஓதினார்கள் என்பதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார். உடல் உறுதியோடு இருக்க

*மன் கீ பாத்* 4 (13)

உணவு மற்றும் வாழ்க்கை முறை மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்தார். அதற்கு யோக கலையையும், சிறுதானிய உணவிற்கும் மக்கள் அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார். குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு ஊட்டச்சத்து அதிகம் தேவை என்பதால் செப்டம்பர் மாதம் ஊட்டச்சத்து மாதமாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுவதாகவும் பிரதமர் தெரிவித்தார். வரவிருக்கும் நாட்களில் பாரீஸ் நகரில் பாராலிம்பிக்ஸ்

போட்டி தொடங்க உள்ள நிலையில், நமது மாற்றுத்திறனாளி சகோதர சகோதரிகள் அங்கு செல்ல இருப்பதால், அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், cheer 4 bharat என்ற ஊக்க குரல் கொடுக்க வேண்டும் என்றும் பிரதமர் தமது உரையில் தெரிவித்துள்ளார். மேலும், வரவிருக்கும் ஜென்மாஷ்டமி, ஓணம் பண்டிகை, விநாயகர் சதுர்த்தி, மிலாடி நபி ஆகியவற்றிற்கும் பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

மோடி மாநாடு (16)

மகராஷ்டிரா மாநிலம் ஜல்கானில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த லட்சாதிபதி சகோதரிகள் மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று பேசினார். நிகழ்ச்சியில் 11 லட்சம் புதிய லட்சாதிபதி சகோதரிகளுக்கு அவர் சான்றிதழ்களையும் வழங்கினார். லட்சாதிபதி சகோதரிகளை பாராட்டிய பிரதமர், அவர்களது தொழில்கள் குறித்து கலந்துரையாடினார். நாட்டில் 1 கோடிக்கும் மேல் இருக்கும் இந்த சகோதரிகள் ஆண்டுக்கு 1 லட்சம் ரூபாய் வரை சம்பாதிக்கின்றனர். மேலும், 4.3 லட்சம் சுய உதவிக்குழுக்களில் சுமார் 48 லட்சம் உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில், 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் சுழல் நிதியையும் பிரதமர் வெளியிட்டார். 2 லட்சத்து 35 ஆயிரத்து 400 சுய

உதவிக் குழுக்களில் 25.8 லட்சம் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் 5 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடனையும் பிரதமர் வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில் மகராஷ்டிரா ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், அம்மாநில முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான், துணை முதல்வர்கள் திரு தேவேந்திர பட்நாவிஸ், திரு அஜித்பவார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஓய்வூதிய திட்டம் 1(17)

மத்திய அரசு ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த புதிய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. புதுடெல்லியில் நேற்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அமைச்சரவை கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், அடிப்படை சம்பளத்தில் இருந்து 50 சதவிகிதம் ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும், ஓய்வூதியதாரர்களின் காலத்திற்கு பிறகு 60 சதவிகிதம் அவர்களது குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். குறைந்தபட்சம் 10 ஆயிரம் ரூபாய் மாத ஓய்வூதியமாக வழங்கப்படும் என்றும் அவர்

கூறினார். புதிய ஒய்வூதிய திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை தேர்வு செய்யும் வசதி ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இதன் மூலம் நாடு முழுவதும் 23 லட்சம் மத்திய அரசு ஊழியர்கள் பயன் பெறுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த திட்டம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 1 தேதியன்று நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். அறிவியல் மற்றும் தொழில்துறையில் ஒருங்கிணைந்த திட்டமான விஞ்ஞான் தாரா-வை



தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் மனித திறன் மேம்பாடு ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 2021-22 ஆம் ஆண்டு முதல் 2025-26 ஆம் ஆண்டு வரையிலான 15 ஆவது நிதிக் குழு காலத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்த 10 ஆயிரத்து 579.84 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

உயிரி தொழில் நுட்பத் துறையில் பொருளாதாரம் சுற்றுச் சூழல் மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கான பயோ -சி 3

கொள்கைகளுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த கொள்கை நிகர பூஜ்ஜியம் கார்பன் வெளியீடு, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வாழ்க்கை முறை போன்ற அரசின் முன் முயற்சிகளை வலுப்படுத்துவதாக இருக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே, புதிய ஓய்வூதிய திட்டம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி தமது வலைதள பதிவில், தேசத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றும் அரசு ஊழியர்களின் கடின உழைப்பை கண்டு தாம் பெருமிதம் அடைவதாக குறிப்பிட்டுள்ளார். இந்த ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் அரசு

ஓய்வூதிய திட்டம் 3(5)

ஊழியர்களின் கவுரவம் மற்றும் நிதி பாதுகாப்பை உறுதி செய்து சிறப்பான எதிர்காலத்திற்கு வழிவகை செய்யும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், மத்திய அரசு ஊழியர்களின் தேசிய கவுன்சில் பிரதிநிதிகள் பிரதமர் திரு நரேந்திர மோடியை நேரில் சந்தித்து ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தும் முடிவுக்கு தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

கொசு ஒழிப்பு சிஎம் (18)

புதுச்சேரியில், கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா போன்ற நோய்களை கட்டுப்படுத்தவும், இது தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தவும் உள்ளாட்சித் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக புதுச்சேரியில் நீர் தேங்கியுள்ள இடங்கள், புதர்கள் மண்டிக்கிடக்கும் இடங்கள் போன்றவை கண்டறியப்பட்டு, அந்த இடங்களில் டிரோன்கள் மூலம் மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள உள்ளாட்சித் துறை முடிவு செய்துள்ளது. புதுச்சேரி சட்டப்பேரவை வளாகத்தில் முதலமைச்சர் திரு ரங்கசாமி டிரோன்கள் மூலம் மருந்து தெளிக்கும் திட்டத்தை இன்று தொடங்கி வைத்தார். இத்திடடத்தில் பயன்படுத்தப்படும் கிருமிநாசினியானது மத்திய அரசின் விசிஆர்சி அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டு, நாட்டின் பல்வேறு நகரங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், உள்ளாட்சித்துறை இயக்குநர் திரு சக்திவேல், துணை இயக்குனர் திரு சவுந்தரராஜன், புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு கந்தசாமி, உழவர்கரை நகராட்சி ஆணையர் திரு சுரேஷ்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

கிருஷ்ண பகவான் அவதரித்த ஜென்மாஷ்டமி விழாவை முன்னிட்டு அனைத்து மக்களுக்கும் குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்

நாட்டை வளர்ச்சி பாதையில் வழி நடத்தி செல்ல அரசியல் பின்னனி இல்லாத இளைஞர்கள் அதிக அளவில் பொது வாழ்க்கைக்கு வர வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மகராஷ்டிர மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று லட்சாதிபதி சகோதரிகள் மாநாட்டில் பங்கேற்று, 11 லட்சம் பெண் லட்சாதிபதி சகோதரிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

புதுச்சேரியில், கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த ட்ரோன்கள் மூலம் மருந்து தெளிக்கும் திட்டத்தை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடங்கி வைத்தார்.